Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 269

சனிக்கிழமை
23 ஒகஸ்ட் 2025

ஆவணி 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50


## புதிய அரசியலமைப்பு தாமதமாகும்

கொழும்பு, ஓக. 23
பொருளாதார ரீதியிலான சவால்களை எதிர்கொண்ட பின்னரே புதிய அரசியலமைப்பை இயற்றுவதற்குரிய பணிகள் ஆரம்பமாகும். இதனை அவசரமாகச் செய்துவிட 11

ஊழல் மோசடிக் குற்றச்சாட்டில்

# ரணில் கைது

26ஆம் திகதிவரை விளக்கமறியல்
கொழும்பில் உச்சக்கட்டப் பதற்றம்



கொழும்பு, ஒகஸ்ட் 23
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஊழல் மோசடிக் குற்றச்சாட்டில் குற்றப் புலனாய்வுத் துறையால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுக்கு அமைய எதிர்வரும் 26ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். 11



## ரணிலின் கைகளில் விலங்கு!

யாழ்ப்பாணம், ஓக. 23
ரணில் விக்கிரமசிங்க வெலிக்கடை சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது, கைகளில் விலங்கு மாட்டப்பட்டே அழைத்துச் செல்லப்பட்டார்.
முன்னாள் ஜனாதிபதி என எந்தச் சிறப்புரிமையும் அவருக்கு வழங்கப்படவில்லை. (அ-ம)

## வெலிக்கடை சிறையில் ரணில்!

கொழும்பு, ஓக. 23
ஊழல் மோசடிக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, சிறைச்சாலை 11

ரணில் விளக்கமறியல் எதிரொலி

## கோட்டை நீதவான் நீதிமன்றை முற்றுகையிட்டுப் போராட்டம்!

இரவிரவாகக் கொழும்பில் களேபரம்

கொழும்பு, ஓக. 23
முன்னாள் ஜனாதிபதி ரணில் விளக்கமறியலில் வைக்கப்பட்டதும், அவரை அழைத்துச் செல்வதற்கு வந்த சிறைவாகனத்தை மறித்தும் கோட்டை நீதவான் நீதிமன்றத்தை முற்றுகையிட்டும் ரணிலின் ஆதரவாளர்கள் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். 11



## கொட்டடியில் ஆயுதக் குவியல்

யாழ்ப்பாணம், ஓக. 23
யாழ்ப்பாணம் - கொட்டடிப் பகுதியில் நிலத்துக்கு அடியில் புதைத்துவைக்கப்பட்டிருந்த பெருமளவு 11

இன்னும் இரண்டு வாரங்களில்

## பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றுமுழுதாக நீக்கப்படும்!

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உறுதி

கொழும்பு, ஓக. 23
செப்ரெம்பர் மாதத்தின் ஆரம்பத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். 10

## இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மக்களின் காணிகள் விடுவிக்கப்படும்!

கொழும்பு, ஓக. 23
தேசியப் பாதுகாப்புக்கு அத்தியாவசியமான முகாம்கள் மட்டுமே வடக்கு - கிழக்கில் இயங்கும். ஏனைய இடங்கள் விடுவிக்கப்பட்டு மக்களின் காணி 11

## இராணுவமுகாமை அகற்றுமாறு பருத்தித்துறையில் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஓக. 23
பருத்தித்துறையில் பல்வேறு இடங்களில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரை, அந்தப் பகுதிகளில் இருந்து வெளியேறுமாறு வலியுறுத்தி 11

## மாகாணசபை முறையென்பது இனப்பிரச்சினைக்குத் தீர்வல்ல

அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 23
மாகாணசபை முறைமையென்பது இனப்பிரச்சினைக்குரிய தீர்வல்ல என்பதை அன்றே நாம் சுட்டிக்காட்டினோம். அது இன்று நிரூபணமாகியுள் 11

## செம்மணி விவகாரத்தில் அரசாங்கம் தலையிடாது

கொழும்பு, ஓக. 23
செம்மணி விவகாரத்தில் அரசாங்கம் எவ்வித கண்காணிப்பையும் மேற்கொள்ளவில்லை. சுயாதீனமாகவே நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன 10



முச்சந்தி முரளி

'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையிறது வழமைதான் கண்டியளோ'

## உள்ளகப் பொறிமுறையூடாக பொறுப்புக்கூறல் நிறைவேறும்!

வெளிப்புறத் தலையீடு இல்லை; அரசாங்கம் திட்டவட்ட அறிவிப்பு

கொழும்பு, ஓக. 23
சர்வதேசம் ஏற்கக்கூடிய நம்பகரமான உள்ளக பொறிமுறை ஊடாகவே பொறுப்புக்கூறல் நடவடிக்கை முன்னெடுக்கப்படும். இதற்கு வெளியக அழுத்தங்கள் தேவையில்லை என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். 11

## செல்வச்சந்நிதியானுக்கு இன்று கொடியேற்றம்!

யாழ்ப்பாணம், ஓக. 23
யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா இன்று நண்பகல் 12 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்ப 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|---|
| திகதி 22.08.2025 | திகதி 22.08.2025 | திகதி 22.08.2025 | திகதி 22.08.2025 | திகதி 22.08.2025 | திகதி 22.08.2025 | திகதி 22.08.2025 | திகதி 22.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4171 | சீட்டிழுப்பு இலக்கம் 1238 | சீட்டிழுப்பு இலக்கம் 0197 | சீட்டிழுப்பு இலக்கம் 2277 | சீட்டிழுப்பு இலக்கம் 5929 | சீட்டிழுப்பு இலக்கம் 1959 | சீட்டிழுப்பு இலக்கம் 0504 | சீட்டிழுப்பு இலக்கம் 0045 |
| ஆங்கில எழுத்து W | வெற்றி இலக்கினம் துலாம் | ஆங்கில எழுத்து C | ஆங்கில எழுத்து T | ஆங்கில எழுத்து C | ஆங்கில எழுத்து E | ஆங்கில எழுத்து C | வெற்றி இலக்கினம் துலாம் |
| | | | சுப்பர் இலக்கம் 23 | | | | |
| வெற்றி இலக்கங்கள் 26 33 36 60 | வெற்றி இலக்கங்கள் 19 28 47 59 | வெற்றி இலக்கங்கள் 0 1 9 9 | வெற்றி இலக்கங்கள் 19 59 61 73 | வெற்றி இலக்கங்கள் 9 3 2 1 6 7 | வெற்றி இலக்கங்கள் 07 10 38 59 | வெற்றி இலக்கங்கள் 2 1 6 7 | வெற்றி இலக்கங்கள் 15 18 50 53 |
| விசேட எழுத்து W | | | | | விசேட எழுத்து E | | |

# இரு நாடுகளுக்கு அநுர செப்ரெம்பரில் பயணம்

**கொழும்பு, ஒக.23**

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அடுத்தமாதம் இரு உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளவுள்ளார் என்று தெரிவிக்கப் படுகின்றது. அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கே இவர் செல்ல வுள்ளார்.**

அமெரிக்கப் பயணத்தில் நியூ யோர்க்கில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 80 ஆவது அமர்வில் கலந்து கொண்டு ஜனாதிபதி விசேட உரையாற்றவுள்ளார். அமெரிக்க வரிவிதிப்பின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக அமெரிக்க அதிகாரிகளுடன் அவர் முக்கியத்துவம் வாய்ந்த பேச்சுகளில் ஈடுபடுவார் என்றும் கூறப்படுகின்றது. அத்துடன் அடுத்தமாதம் 24ஆம் திகதி அமெரிக்காவில் நடைபெறும் ஐ.நா.பொதுச்சபை அமர்விலும் ஜனாதிபதி உரையாற்றவுள்ளார். அமெரிக்கப் பயணத்தைத் தொடர்ந்து அடுத்தமாதம் 27ஆம் திகதி ஜனாதிபதி ஜப்பான் செல்கிறார். ஜப்பான் பிரதமரின் அழைப்பில் அங்கு செல்லும் அவர், அந்த நாட்டுப் பிரதமர் உட்பட பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடலிலும் ஈடுபடவுள்ளார்.

ஜனாதிபதியின் ஜப்பான் பயணத்தில் இருநாட்டு இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவுகளில் புதிய மாற்றங்கள் ஏற்படும் என்றும், இலங்கையில் இடைநிறுத்தப்பட்டுள்ள ஜப்பானியத் திட்டங்களும் இந்தப் பயணத்தின் பின்னர் விரைவாக ஆரம்பிக்கப்படும் என்றும் அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஏ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 22.08.2025 | தினம் வெள்ளிக்கிழமை | வெற்றி வாரம் 0637 |
| ஆங்கில எழுத்து M | வெற்றி இலக்கம் 0 1 3 5 7 1 | |

| Super Ball | | | |
|---|---|---|---|
| திகதி 22.08.2025 | தினம் வெள்ளிக்கிழமை | | |
| சீட்டிழுப்பு வாரம் 2903 | ஆங்கில எழுத்து B | வெற்றி இலக்கம் 09 22 32 56 | |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி 22.08.2025 | தினம் வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து J | வெற்றி இலக்கம் 10 22 57 66 | வெற்றி வாரம் 5064 |

| SASIRI | |
|---|---|
| திகதி 22.08.2025 | தினம் வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் 0753 | வெற்றி இலக்கம் 04 21 49 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி 22.08.2025 | தினம் வெள்ளிக்கிழமை | |
| சிம்மம் | வெற்றி இலக்கம் 07 13 14 30 | சீட்டிழுப்பு வாரம் 4615 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி 22.08.2025 | தினம் வெள்ளிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து R | சுப்பர் இலக்கம் 15 | வெற்றி இலக்கம் 12 20 50 56 | வெற்றி வாரம் 2079 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி 22.08.2025 | தினம் வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து A | வெற்றி இலக்கம் 11 20 35 45 | வெற்றி வாரம் 2729 |

தபால் ஊழியர்கள் போராட்டம்

## 100 மில்லியன் ரூபா 4 நாள்களில் இழப்பு

கொழும்பு, ஒக.23

அஞ்சல் சேவை தடைப்பட்டுள்ளதால் நான்கு நாள்களில் அரசாங்கத்துக்கு 100 மில்லியன் ரூபாவுக்கு அதிகமான நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று பிரதித் தபால்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் குவிந்திருந்த வெளிநாட்டுத் தபால் பொதிகள் மற்றும் கடிதப் பைகள் மத்திய தபால் பரிவர்த்தனைக்குக் கொண்டு வரப்பட்டபோதிலும், ஊழியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக நாடு முழுவதும் விநியோகிக்கமுடியாது முடங்கியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## கடமைக்குத் திரும்பினாலே சம்பளம் விடுவிக்கப்படும்!

தபால்மா அதிபர் அறிவிப்பு

கொழும்பு, ஒக.23

அங்கீகரிக்கப்பட்ட விடுப்பு இல்லாமல் பணிக்கு வராத தபால் திணைக்களத்தினர் அனைவருக்கும் ஓகஸ்ட் மாதத்துக்கான சம்பளத்தை வழங்க நிதி விடுவிக்க வேண்டாம் எனத் திறைசேரி அறிவித்துள்ளதாகத் தபால்மா அதிபர் ஆர்.டபிள்யூ.ஆர்.சத்குமார தெரிவித்துள்ளார்.

அங்கீகரிக்கப்பட்ட விடுப்பு இல்லாமல் சேவைக்கு வராத அனைவரும் வேலையை விட்டு வெளியேறியதாகக் கருதப்படுவார்கள். விடுமுறைகள் இரத்துச்செய்யப்பட்டதால் உடனடியாகப் பணிக்குத் திரும்பவேண்டும்.

வேலைநிறுத்தத்தில் ஈடுபடும் அதிகாரிகளுக்கு சம்பளம் வழங்கப்படமாட்டாது எனத் திறைசேரி அறிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## அரசியல் ஆதாயத்துக்கான தொழில்முறைப் போராட்டம்

அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஒக.23

தபால் ஊழியர்களின் கோரிக்கைகளின் படி இது அரசியல் தேவைகளுக்காக நடத்தப்படும் ஒரு தொழில்முறைப் போராட்டம் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடின உழைப்பு, ஈடுபாடு மற்றும் உங்கள் திறமைகளை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்புகளுக்காக நாங்கள் வெகுமதி அளிக்கிறோம். உங்கள் கடின உழைப்புக்கான பலனை நிச்சயம் பெறுவீர்கள்.

எந்த வேலைநிறுத்தம் செய்தாலும் தபால் ஊழியர்களுக்கு கைரேகைச் சட்டம் கட்டாயம் நடைமுறைப்படுத்தப்படும். எந்தக் காரணத்துக்காகவும் அந்தச் சட்டம் மாற்றப்படாது. ஊழியர்கள் இந்த கைரேகை முறைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது அவர்களுக்கு வெட்கக்கேடானது- என்றார். (ச-இ)

## ஓட்டோச் சாரதிக்கு மரணதண்டனை

கொழும்பு, ஒக.23

வாய்த் தகராறைத் தொடர்ந்து கூரிய ஆயுதத்தால் குத்தி ஒருவரைக் கொலை செய்த குற்றத்துக்காக 43 வயதுடைய முச்சக்கரவண்டிச் சாரதியொருவருக்கு கொழும்பு உயர் நீதிமன்றம் மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளது.

இந்தக் கொலைச் சம்பவம் 2010ஆம் ஆண்டு நடந்துள்ள நிலையில் கொலை செய்த வழக்கில் குற்றவாளி என அவர் நிரூபிக்கப்பட்டதையடுத்து தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## சம்பளம் வழங்கப்படாவிட்டால் சட்டநடவடிக்கையை நாடுவோம்

தபால் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவிப்பு




கொழும்பு, ஒக.23

எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை வேலைநிறுத்தத்தைக் கைவிடும் முடிவை எடுக்கப்போவதில்லை. சம்பளம் வழங்கப்படாவிட்டால் தபால்மாஅதிபர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனத் தபால் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.


தபால் ஊழியர்களின் 19 கோரிக்கைகளுக்கும் நியாயமான தீர்வு கிடைக்கும்வரை வேலைநிறுத்தம் தொடரும். அரசாங்கத்திடமிருந்து நல்ல பதில் கிடைக்காததால் ஆறாவது நாளாக வேலைநிறுத்தம் தொடர்கிறது.

ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வுகாணும் நோக்குடன் முறையான கலந்துரையாடலுக்கு அழைத்தால் அதில் கலந்துகொள்ளத் தயாராக உள்ளோம் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்முகத் தீர்த்தக்கேணியில் தீர்த்தமாடிய நல்லூர்க் கந்தன்






யாழ்ப்பாணம், ஓக.23
வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாவின் தீர்த்தத் திருவிழா நேற்று வெள்ளிக் கிழமை காலை மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றது.
காலை 6.15 மணியளவில் வசந்தமண்டபத்தில் நல்லூர் வேற்பெருமான், வள்ளிநாயகி, தெய்வநாயகி, விநாயகப் பெருமான், சண்டேஸ்வரர் ஆகிய பஞ்ச மூர்த்திகளுக்கும் சிறப்புத் தீபாராதனை, பூசை, கொடித்தம்பப் பூசை வழி பாடுகள் என்பன இடம்பெற்றதைத் தொடர்ந்து பஞ்சமூர்த் திகளும் எழுந்தருளி ஆலய உள்வீதியில் தெற்குப் பக்க மாக அமைந்துள்ள சண்முகத் தீர்த்தக்கேணி தீர்த்த மண்டபத்தைச் சென்றடைந்தனர்.
அங்கு பஞ்சகௌவிய அபிஷேகம், சிறப்புப் பூசை வழி பாடுகள் இடம்பெற்று அடியவர்களின் அரோகராக் கோஷங்களுக்கு மத்தியில் காலை 8 மணியளவில் தீர்த்தோற்சவம் சிறப்பாக இடம்பெற்றது. தொடர்ந்து பஞ்ச மூர்த்திகளும் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் புடை சூழ உள்வீதி, வெளிவீதி உலாவரும் திருக்காட்சி இடம்பெற் றது. தீர்த்தோற்சவத்தை முன்னிட்டும் ஏராளமான அடிய வர்கள் பல வகையான காவடிகள் எடுத்து நேர்த்திக்கடன் களை நிறைவேற்றினர். (ச-41-66,17)

# கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக.23
மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அடுத்த வருடம் தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடவுள்ளதால் விழாவைச் சிறப்பாக நடத்த கல்லூரி யின் பழையமாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகளை உள்ளடக்கிய செயற்பாட்டுக்குழுக்கள் தெரிவுசெய் யப்படவுள்ளன.
தெரிவுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப. 3.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கூட்டத்தில் அனைவரையும் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான ஆலோச னைகளை வழங்குமாறு கல்லூரி அதிபர் பொ. நடேசலிங்கம் அறிவித் துள்ளார். (ச-41,131ளு)

# தெய்வீகத் திருக்கூட்டத் தொடர்

யாழ்ப்பாணம், ஓக. 23
நல்லூர்ப் பெருந்திருவிழாவை முன்னிட்டு, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் முன் னெடுத்துவரும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடரின் 26 ஆம் நாள் நிகழ்வு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள் ளது.
வேதாந்த மடம், ஸ்ரீ சிவகுருநாதபீட எட்டாவது குரு பீடாதிபதி ஸ்ரீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள் திரு முன்னிலை வகிக்க, மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயப் பிரதம குருக்கள் சிவஸ்ரீ நாகேந்திர திவா கரக் குருக்கள் தலைமையில் நிகழ்வு இடம்பெற வுள்ளது.
நல்லூர் மற்றும் யாழ்ப்பாணம் பிரதேச செயலக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அறநெறிப்பாடசாலை, நல்லூர் வண்ணை ஸ்ரீவிஸ்வலிங்க மகாகணபதி அறநெறிப்பாடசாலை மற்றும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் கற்கைகள் நிறுவக மாணவர்கள், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கற்கைகள் நிறுவக மாணவர்கள் ஆகியோர் கலைநிகழ்வுகளை வழங்கவுள்ளனர்.
மேலும் வலிகாமம் கல்வி வலய இந்து சமய ஆசி ரிய ஆலோசகர் சைவப்புலவர் செ.கந்தசத்தியதா சன் "வேலும் மயிலும்" எனும் தொனிப்பொருளில் சொற்பொழிவாற்றுவார். முருக நடனத்தை இ.அனாமிகா நிகழ்த்துவார். ஜெயக்குமார் கார்த் திகன் வயலின் இசை நிகழ்த்துவார். மாணவர்க ளுக்கான பரிசளிப்பு நிகழ்வைத் தொடர்ந்து, நன்றி யுரையை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அறநெறிப் பாடசாலை ஆசிரியர் திருமதி வளர்மதி சிவகுமார் வழங்கவுள்ளார். (ச-25)

(பூங்காவனம்)




## தேரோடும் வீதி சேறாகும்

**பல்லவி:**
நீரோடும் விழிகளினால் ஆறாகும் நல்லைத்
தேரோடும் வீதி எங்கும் சேறாகும்

**அனுபல்லவி:**
பார் எங்கும் பகை ஓட்ட வேல் பாயும் தமிழ்
வேரினிலும் ஓம் என்னும் ஒலி தோயும்

**சரணம் : 1**
சங்கம் அதில் தமிழ் ஆய்ந்த தனி முருகோனே
சாவினிலும் தாங்க வரும் தனி முதல்வோனே
அங்கம் அதில் ஆறுமுகம் கொள் அழகோனே
அமைந்த பெரு மாதிருவர் உடன் எழுவோனே

**சரணம் : 2**
ஆவணியில் வாடி நின்று விரதம் பூண்பேன்
ஆடி வரும் தேரினிலே உனையே காண்பேன்
பா அணிந்துன் பாதமலரில் நானும் வீழ்வேன்
பைந்தமிழை நீ அருள நானும் வாழ்வேன்

**சரணம் : 3**
நாத மணி அசைவினிலும் உந்தன் கோலம்
நவ மணிகள் அசைவினிலும் உந்தன் கோலம்
வேத இசைப் பண்ணதிலும் உந்தன் கோலம்
வேண்டி அழும் அன்பரிலும் உந்தன் கோலம்

**சரணம் :4**
செல்லப்பன் யோகன் எனக் குருவாய் வந்தாய்
சேரும் அன்பர் பக்தியினால் எதையும் வேண்டாய்
வெல்ல வரும் வேல் என்பேன் பகையை மாய்ப்பாய்
வேண்டும் உந்தன் அருள் என்பேன் எனை நீ காப்பாய்

**கலாநிதி செ. சுதர்சன்**
தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.

## அருள் பல தருவாய் கந்தா...

எம் சித்தத்தில் தித்திக்கும் செந்தில் குமரா!
நும் பாதத்தில் சரணடைந்தோம்
சரவணபவனே!
சிவகுமாரா! மால் மருகா!
வள்ளி மணவாளனே!
நமக்கெல்லாம் நாயகனே!
நலம் பல தாராய் கந்தனே!
எஞ்ஞான்றும் உனைத் தொழுதோம்.
எண்ணிய கருமம் ஈடேற வைப்பாய்
எல்லோர் நலனும் பேண வழி சமைப்பாய்
எம் உயிர் நாயகனே! நல்லைக் கந்தா!
நின்னைச் சரணடைந்தேன்
நீக்கமற நிறைந்து அருள் பல தருவாய்
இந்நாளினிலே.!

**மிஷாந்தி செல்வராஜா ஜெயசிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரிய அனுகூலமான நாள். புதிய முயற்சி சாதகமாக முடியும். தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். சிலருக்கு வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. நிகழ்ச்சி ஒன்றுக்கான பேச்சு வார்த்தை சுமுகமாக முடியும்.

**மிதுனம்:** அற்புதமான நாள். இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். தொடங்கிய காரியங்கள் அனுகூலமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத் துணை பக்கபலமாக இருப்பார்.

**கடகம்:** சங்கடம் ஏற்படக்கூடும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சிலருக்கு மனதில் இனம் தெரியாத சோர்வு உண்டாகலாம். உடல் நலனில் கவனம் தேவை. வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**துலாம்:** உற்சாகமான நாள். முக்கியமான முடிவுகள் எதையும் இன்று எடுக்க வேண்டாம். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. அலுவலகத்தில் அதிகாரிகளிடம் எதிர்பார்த்த சலுகையும் பணஉதவியும் கிடைக்கும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தொல்லைகள் மறையும்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். அரசாங்க வகையில் எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். எதிர்பார்த்த காரியம் இழுபறியாகி முடியும். சகோதரர்களால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும்.


**மகரம்:** புதிய முயற்சிகளைத் தொடங்குவது சாதகமாக முடியும். உடல்நலனில் கவனம் தேவை. சிலருக்கு சிறிய அளவில் ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டு சரியாகும். பேசும்போது வீண்மனவருத்தம் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். கருத்து வேற்றுமை நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். காரியங்களில் வெற்றி உண்டாகும்.

**மீனம்:** பொறுமையுடன் இருக்கவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். முக்கியமான முடிவுகளை ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

# பிறந்த எண் பலன்கள்

ஜோதிட ரீதியாகப் பார்க்கும்பொழுது ஒவ்வொரு எண்ணில் பிறந்தவர்களுக்கும் ஒவ்வொரு குணம் உண்டு. அந்தந்த எண்ணிற்கேற்ப அவரவரின் இயல்புகளும்அமைந்திருக்கும். ஒன்றாம் எண்ணிலிருந்து 31ஆம் எண்வரை எந்த எண்ணில் பிறந்திருந்தாலும் அதன் கூட்டுத் தொகையானது ஒன்றிலிருந்து 9 வரையே இருக்கும்.




ஒவ்வொருவர் வாழ்விலும் புயல் (சோதனைகள்) என்பது நிச்சயம் ஏற்படும். அதற்கு எந்த எண்ணும் விதிவிலக்கல்ல. மற்ற எண்காரர்கள் துவண்டு விடும்போது 2ஆம் எண்காரர்கள் மட்டும் வாழ்க்கையின் சோதனைகளில் வளைந்து கொடுத்து, முன்னேறி விடுவார்கள். அம்பாளின் அருள் பெற்ற எண் இது.

இவர்கள் எவ்வளவு தூரம் வளைந்து கொடுக்கிறார்களோ, பல சமயங்களில் அதைவிடக் கடின சித்தராகவும் மாறிவிடுவார்கள். மனதால் செய்யும் தொழில்களில் (கற்பனை, கவிதை, திட்டமிடுதல் போன்றவற்றில்) மிகவும் விருப்பமுடன் ஈடுபடுவார்கள். இவர்களுக்கு விட்டுக் கொடுக்கும் குணம் உள்ளதால், மக்களால் பெரிதும் விரும்பப்படுவார்கள். கற்பனை கலந்து கவர்ச்சியுடன் பேசுவதால் இவர்களுக்கு மக்களாதரவு உண்டு.

இந்த எண்ணின் ஆதிக்கம் குறைந்தவர்கள் வீண் பிடிவாதம் கொண்டு தங்கள் வாழ்க்கையைத் தாங்களே கெடுத்துக் கொள்வார்கள். இவர்களுக்குச் சந்தேகக் குணம் அதிகம் உண்டு. இதனால் முழுமையாக யாரையும், நம்பாமல் திரும்பத் திரும்ப மற்றவர்களுடன் சந்தேகம் கொள்வதால் தான். இவர்களுக்கு எதிரிகள் உருவாகின்றனர்.

எதையும் பதற்றத்துடனும், ஒருவித சோம்பலுடனும் அணுகும் குணத்தினையும் மாற்றிக் கொண்டால் இவர்கள் நிச்சயம் முன்னேறுவார்கள். காரியங்கள் எவற்றையும் சட்டென முடிக்காமல் காலத்தைக் கழித்து விட்டு, பின்பு அவசரம் அவசரமாகச் செய்து முடிப்பார்கள். ஒரு மாதத்தின் இறுதியில்தான் அவசர அவசரமாக உட்கார்ந்து அந்தந்த மாதத்தின் வேலையை முடிப்பார்கள். தங்களது வாக்குறுதிகளை இவர்கள் காப்பாற்றுவது மிகவும் சிரமம்.

இல்லாததைக் கற்பனை செய்து கொண்டு தங்களது வாழ்க்கையில் முடிவெடுக்க முடியாமல் திண்டாடுவார்கள். காலையில் சுறுசுறுப்புடன் தொடங்குவார்கள். ஆனால் மாலைக்குள் ஊக்கம் குறைந்து, சோர்ந்துவிடும் இயல்பினர்.

இவர்கள் வெளியே தைரியமுடையவர்களாகத் தோன்றினாலும் உள்ளத்தில் பயமே மேலோங்கி நிற்கும். எனவே, இவர்கள் ஒரு வழிகாட்டியை தேர்ந்தெடுத்து அவரின் ஆலோசனைகளின் பேரில் காரியங்களைச் செய்துவரவேண்டும்.

சந்தர்ப்பங்கள் இவர்களைத் தேடி வரவேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். இதைவிட்டு விட்டு இவர்கள் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி, முழு மனதுடன் செயலாற்றினால் எளிதில் இவர்களை வெற்றிமகள் தேடி வருவாள்.

குடும்பத்தின்மீது அதிக அக்கறை உள்ளவர்கள். குடும்பத்தை பொறுப்போடு நடத்தி செல்வார்கள். சில நேரங்களில் குடும்பத்திலுள்ளவர்களிடம் கோபம் கொண்டு கடினமான வார்த்தைகளை பிரயோகித்து விடுவதால் நெருக்கமானவர்களிடம் விரோதத்தையும் சம்பாதித்து விடுவார்கள்.

சுயநலம் இல்லாமல் எதையும் தியாகம் செய்யத் துணிவதால் வாழ்க்கையில் அவ்வப்போது ஏமாற்றங்களையும் சந்திக்க நேரிடும்.

**பொருளாதாரம்** : இரண்டாம் எண்ணில் பிறந்தவர்கள் பணத்தை எந்த விதத்திலாவது சம்பாதிக்கக் கூடிய ஆற்றல் கொண்டவர்கள். வருமானம் குறைவாக இருந்தாலும் ஆடம்பரமாக செலவு செய்வதால் சேமிப்பு குறைவாகவே இருக்கும். பிறருக்குக் கொடுக்க வேண்டிய கடன்களை இவர்கள் தவறாமல் கொடுத்தாலும், இவருக்கு வர வேண்டிய பண தொகைகளை வசூலிப்பதில் மிகுந்த சிரமம் உண்டாகும். பண விஷயத்தால் நெருங்கி பழகுபவர்களிடம் அடிக்கடி மன ஸ்தாபங்கள் உண்டாகும். எப்பொழுதும் கொடுக்கல் வாங்கலில் கவனமுடன் செயற்படுவதே நல்லது.

யாரிடமும் அவ்வளவு எளிதில் நெருங்கி பழக மாட்டார்கள். அப்படி நெருங்கிப் பழகிவிட்டால் அவ்வளவு எளிதில் பிரியமாட்டார்கள். நண்பர்களுக்காக எதையும் செய்வார்கள். இவர்களுக்கு 1,5 ல் பிறந்தவர்கள் நண்பர்களாகவும், 4,7 போன்ற எண்களில் பிறந்தவர்களிடம் ஒத்துப்போக முடியாதவர்களாகவும் இருப்பார்கள். அதிக இரக்க மனம் கொண்டவர்கள். ஆதலால் நண்பர்களால் சில நேரங்களில் ஏமாற்றப்படுவார்கள்.

**அதிர்ஷ்ட திகதி 1,10,19,3, 12,21,30, அதிர்ஷ்ட நிறம் - வெள்ளை, பொன் நிறம், அதிர்ஷ்ட திசை தென் கிழக்கு, அதிர்ஷ்ட கிழமை திங்கள், வியாழன், அதிர்ஷ்ட கல் - முத்து, சந்திரகாந்தகல் அதிர்ஷ்ட தெய்வம் - வெங்கடாசலபதி, துர்க்கை**

# மணிமண்டபம் திறந்துவைப்பு



சுழிபுரம் மேற்கு ஸ்ரீ அரிகர புத்திர ஐயனார் மணிமண்டபத் திறப்பு நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இதன்போது சுழிபுரம் மேற்கு ஸ்ரீ அரிகர புத்திர ஐயனார் ஆலயத்தில் வழிபாடுகள் நடைபெற்று ஊர்வலமாக வீதிவலம் வந்து மண்டபத்தினை அடைந்து மணி மண்டபம் நாடா வெட்டித் திறந்து வைக்கப்பட்டது. (ச-41-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் விரைவில் இறுதிசெய்யப்படும்

## நிபுணர்கள் குழு தெரிவிப்பு

கொழும்பு, ஓக.23

**புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு விரைவில் தயாரிக்கப்பட்டு இறுதிசெய்யப்படும் என்று அதுதொடர்பில் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு தெரிவித்துள்ளது.**

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டவரைவுக்காக அமைச்சரவையின் ஒப்புதலின்கீழ் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு, அதன் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி ரியென்சி அர்சகுலரத்ன தலைமையில் நீதி அமைச்சில் அண்மையில் கூடியது. சட்டவரைவில் கொண்டுவரப்படவேண்டிய திருத்தங்கள் தொடர்பாக அந்தக் குழு விரிவாகக் கலந்துரையாடியது.

மேலதிக சொலிசிட்டர் ஜெனரலும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான நெரின் புல்லே, சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் அசங்க கரவிட்ட, நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் பியமுந்தி பீரிஸ் மற்றும் உயர் அதிகாரிகள் குழு இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவுகுழுஇதுவரை14முறை கூடியுள்ளது. இந்தச் சட்டவரைவு தொடர்பாக பொதுமக்களின், சிவில் சமூக அமைப்புகளின் கருத்துகள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் மற்றும் சமூகங்களின் கருத்துகளைப் பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)



# பொலித்தீன் கட்டுப்பாடு; வருகின்றது புதிய வரி!

கொழும்பு, ஓக.23

பொலித்தீன் உறைகளைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அவற்றுக்குப் புதிய வரியொன்றை அல்லது மேலதிகக் கட்டணம் ஒன்றை விதிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அதன்பிரகாரம் இனிவரும் காலங்களில் பல்பொருள் அங்காடிகள் உள்ளிட்ட எந்தவொரு விற்பனை நிலையத்திலும் பொலித்தீன் உறைகள் இலவசமாக வழங்கப்படமாட்டாது.

சூழலை மாசுபடுத்தும் பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வரி விதிப்பொன்றை மேற்கொள்வது குறித்து சுற்றாடல் அதிகாரசபை, நிதியமைச்சுக்கு முன்மொழிவொன்றைச் சமர்ப்பித்துள்ளது. (ச-இ)

# அநுர பிரியதர்ஷன மீது குற்றப்பத்திரிகை தாக்கல்

கொழும்பு, ஓக.23

முன்னாள் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா, அவரது மனைவி தம்மிகா ஷிரானி சுமகரத்ன உள்ளிட்ட ஆறு பிரதிவாதிகளுக்கு எதிராக கொழும்பு பிரதான மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன முன்னிலையில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு பிங்கிரிய மற்றும் நாரம்மலப் பிரதேசங்களில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாகக்கூறி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 61 இலட்சத்துக்கும் அதிகமான தொகையை 2015 ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைகளுக்குப் பயன்படுத்தினரென அவர்கள்மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. (ச-இ)


# நெல்லியடியில்விபத்து: ஒருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஓக.23

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாலைசந்தியில் மோட்டார் சைக்கிளும் ஹன்டர் வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயம் அடைந்தவர் பருத்தித்துறை மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-100)



# கல்விப் பாடத்திட்டத்தில் 'சட்டம்' பாடம்

## வலியுறுத்துகிறது இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்

கொழும்பு, ஓக.23

தேசிய கல்விப் பாடத்திட்டத்தில் 'சட்டம்' ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்படவேண்டும் என்று இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

கல்வி அமைச்சர் பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு எழுதிய கடிதத்தில், சட்டம் அல்லது அது போன்ற ஒரு பாடத்தைத் தொடக்கக் கல்வியில் கட்டாயக் கூறுகளாகவும், க.பொ.த. உயர்தரத்தில் விருப்பப் பாடமாகவும் சேர்க்கவேண்டிய தேவையும் நியாயமும் உள்ளது.

பல நாடுகள் ஏற்கனவே தங்கள் பாடசாலை அமைப்புகளில் சட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளன, இது குடிமை விழிப்புணர்வு மற்றும் ஜனநாயக ஈடுபாட்டுக்கான பிரதான அடித்தளமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்றும் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (ச-இ)



# புதினம் தெரியுமோ?

## லீவில இலங்கை எத்தனையாம் இடம்?

உலகத்திலேயே கனக்க பொதுவிடுமுறை உள்ள நாடுகளின்ர பட்டியலில இலங்கை எத்தினையாவதா இருக்கெண்டு ஆருக்கும் தெரியுமோ? முதலிடத்துல கம்போடியாவும், ரண்டாம் இடத்தில எங்கட இலங்கையும் இருக்கினம். இப்பிடி உலகத்திலேயே ரண்டாவது லீவுகள் உள்ள நாட்டை எப்பிடியாவது முதலாமிடத்துக்குக் கொண்டந்திடவேணுமெண்டு எங்கட திசைகாட்டி எம்.பி.மாரும், வீட்டுக்கட்சி எம்.பி.மாரும் விழுந்தடிச்சு வேலை செய்யினம். அப்பிடித்தான் நல்லூர்த் தேருக்கும் உவையள் லீவு விடச்சொல்லி பிரதமரோட கதைச்சதை தங்கட பேஸ்புக்கில 'தேருக்கு லீவு' எண்டு போட, டிப்பார்ட்மெண்ட் 'அப்பிடி லீவில்லை' எண்டு மறுத்தான் அடிக்க, ஒரே குழப்பமாப் போட்டுது. பிறகு கட்டக்கடைசியா ஆளுநர் "தேருக்கு பள்ளிக்கூடங்களுக்கு லீவு, ஆனால் பதில் பாடசாலை வைக்கோணும்" எண்டு அறிவிக்கத்தான் குழப்பம் அடங்கினது.

எதுக்காக ஆளுநர் அப்பிடி அறிவிச்சவர் எண்டதுக்குப் பின்னால கனக்கச் சங்கதியள் நடந்திருக்குது. நல்லூருக்கு வழமையாவே யாழ்ப்பாண வலயத்தில லீவு கேக்கிற பள்ளிக்கூடங்களுக்கு அந்த லீவு குடுக்கிறதால, அதின்படியே இந்தமுறையும் செய்யுங்கோ எண்டு முதலே ஆளுநர் ஓர்டர் போட்டிட்டார். இதைப் பட்சி நேற்றைக்கும் சொல்லியிருந்தது. அப்பிடி ஆளுநர் ஓர்டர் போட்டதே தெரியாமல் பிரதமரிட்ட தாங்கள் கேட்டு மாவட்டம் முழுக்க லீவு போட அறிவிச்சிட்டினம் எண்டு, திசைகாட்டி எம்.பி.க்கள் சிலரும், வீட்டு எம்.பி. ஒருத்தரும் கடுமையாக் கொக்கரிச்சவை. ஆனால் அவை சொன்னமாதிரி லீவுக்கு அரசாங்கம் ஓமெண்டவுமில்லை, லீவு விடச் சொல்லி கல்வியமைச்சின்ர செயலாளர் உத்தரவும் போடவுமில்லை. ஆனால் அப்பிடிக் கல்வியமைச்சின்ர செயலாளர் வடமாகாணக் கல்வி அமைச்சின்ர செயலாளருக்கு எழுத்துமூலம் அறிவிச்சார் எண்டு திசைகாட்டி எம்.பி. ஒருத்தர்தான் இடைவிடாமல் கூவிக்கொண்டிருந்தவர். அதாலதான் சனமும் குழம்பினது. "ஒருகட்டத்தில நாளைக்கு தேருக்கு லீவு இருக்கோ, இல்லையோ?" எண்டு கல்வித் திணைக்களத்துக்கும், ஆளுநர் அலுவலகத்துக்கும் போனுக்கு மேல போனாம். பெற்றார், ரீச்சர்மார், அதிபர்மார் எண்டு எல்லாருக்கும் "அப்பிடி மாவட்டம் முழுக்க லீவில்லை" எண்டு பதில் சொல்லியே திணைக்களத்தில உள்ளவை களைச்சுப்போட்டினம். அப்பவும் ஆளையும் எழுப்பி முயலையும் எழுப்பி, லீவுக் கதையையும் எழுப்பின எம்.பி.மார் "நல்லூருக்கு லீவு கிடைத்தமை வரலாற்று வெற்றி" எண்டமாதிரி பேஸ்புக்கில கொண்டாடிக்கொண்டிருந்திச்சினமே தவிர, இந்தக் குழப்பத்தைத் தீர்க்க ஒருவேலையும் செய்யேலை. இதில ஆகத் திண்டாட்டம் ஆளுநருக்குத்தான். ஒருவேளை உண்மையாவே பிரதமர் லீவு குடுக்க ஓமெண்டிருந்தார் எண்டால், அதைக் குடுக்காமல் விட்டால் பிரதமருக்கு எதிரா ஆளுநர் வேலை செய்யிறார் எண்டு கதைவரும். அப்பிடியில்லாமல் பிரதமரோ, கல்வியமைச்சோ ஒண்டுமே அறிவிக்காமல் ஆளுநர் லீவைக் குடுத்தால், பிறகு சந்நிதி, வல்லிபுரக்கோயில் எண்டு எல்லாக் கோயில் தேருக்கும் லீவு குடுக்கவேண்டியிருக்கும் எண்ட சிக்கல். இப்பிடி ஆளுநர் இருதலைக்கொள்ளி எறும்பா நிண்டிருக்கிறார்.

கடைசியில யாழ்ப்பாணத்தில இருந்து கொழும்புக்குப் போன் பண்ணி உரியவைக்கு நிலைமையை இஞ்ச உள்ளவை சொல்லியிருக்கினம். அதுக்குப் பிறகுதான் கொழும்பில இருந்து கல்வியமைச்சின்ர செயலாளர் ஆளுநருக்குக் கோல் எடுத்து "நாங்கள் நல்லூருக்கு லீவு தாறம் எண்டு சொல்லவே இல்லை. ஆனால் பள்ளிக்கூடப் பிள்ளையள் நாளைக்குப் பள்ளிக்கூடம் போறதோ இல்லையோ எண்டு குழம்பிப்போயினமே. இதுக்கு என்ன செய்யலாம்?" எண்டு கேட்டிருக்கிறார். பிறகுதான் "சரி இப்போதைக்கு குழப்பத்தை நிப்பாட்டுறதுக்காக லீவை அறிவிச்சுப் போட்டு, பதில் பாடசாலையை வைப்பம்" எண்டு முடிவெடுத்திருக்கினம். அதாலதான் ஆளுநர் லேட்டா அறிவிச்சிருக்கிறார். எம்.பி.மார் சும்மா ஏதும் கதைச்சுப் போட்டு அதைப் பேஸ்புக்கில போட்டுப் பெருக்க, அதிகாரிமாரும், அப்பாவிச் சனமும் எல்லோ ஆத்துலைஞ்சு அந்தரப்படவேண்டியிருக்கு.

padsi@uthayan.com
- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறான முடிவெடுத்து மூதாட்டி உயிரிழப்பு!

யாழ்., ஓக. 23

யாழ்ப்பாணம், அரியாலை பகுதியைச் சேர்ந்த 75 வயதுடைய மூதாட்டி யொருவர் தவறான முடிவெடுத்து நேற்று உயிரிழந்துள்ளார்.

அந்த மூதாட்டி தனக்குத் தானே தீவைத்த நிலையில், படுகாயங்களுடன் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். இந்த நிலையில், மேலதிக சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-26)

## 26ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 07 . 01 . 1977

மறைவு 10 . 09 . 1999

### அமரர் செல்வன் குணசிங்கம் ஞானேந்திரன்


(குட்டி கண்ணா - கோபிகா ஆடையக உரிமையாளர்)

அலங்காரா ! நல்லூரா ! எனப் போற்றப்படும்
நல்லூர் கந்தனின் திருவிழாக்காலங்களில்
உனது நினைவலைகள் எம்மை
சூழ்ந்து தவிக்கின்றோமடா - கண்ணா
நல்லூர் பூங்காவன தினத்தில் உனது
உயிர் பிரிந்து 26 ஆண்டுகள் சென்றுவிட்டன
ஆனாலும் எமது உயிரில் கலந்த
உன் நினைவுகள் எமது உயிர்
பிரியும் வரைக்கும் எம்முடன் வாழுமடா.

40/6 புகையிரத வீதி,
கிழக்கு ஒழுங்கை, கந்தர்மடம். (CS/59196) J-1

உனது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 08 . 06 . 1940

மறைவு 03 . 09 . 2024

### செல்லப்பா தங்கராஜா

*திதி: பிரதமை (23.08.2025)*

அன்பின் திருவுருவே பண்பின் உறைவிடமே!
எங்களுக்கெல்லாம் அன்பு காட்டி அரவணைத்த
எம் அன்புத் தெய்வமே!
நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து ஓர் ஆண்டல்ல
எத்தனை அண்டுகள்தான் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை விட்டு
என்றும் அகலாது.

(CS/3856) J-1

குடும்பத்தினர்




## மரண அறிவித்தல்



மலர்வு 20 . 06 . 1942

உதிர்வு 15 . 08 . 2025

### தில்லைநாயகி செல்லத்துரை

சரசாலை தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லைநாயகி செல்லத்துரை அவர்கள் 15.08.2025 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காங்கேசு - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்புப்புதல்வியும், செல்லத்துரையின் அன்பு மனைவியும், சிறீ, சிவாஜி, பத்மா, கீதா, சசி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 24.08.2025 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புக்கு:**

SRI (SON) (NORWAY) - +47 930 58 133
SIVAJI (SON) - +647 298 3557
PATHMA (DAUGHTER) - +437 421 0871
GEETHA (DAUGHTER) - +647 273 5518
SASI (SON) - +647 880 7274

தகவல்:
குடும்பத்தினர்

(CR 45867) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# வந்தோரைக் கவனியுங்கள்!

இந்தியாவில் தங்கியிருக்கும் பல்லாயிரம் ஈழத் தமிழ் அகதிகளை மீண்டும் இலங்கைக்குத் திருப்பியனுப்பும் திட்டங்களில் இருந்து பின்வாங்கியிருக்கின்றது ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் முகவரகம். இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பும் ஈழத் தமிழர்கள், இலங்கையின் விமான நிலையங்களில் வைத்து அண்மைக்காலமாகக் கைதுசெய்யப்படுகின்றனர். இத்தகைய சர்ச்சைக்குரிய பின்னணியில்தான் ஈழத்தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் திட்டங்களில் இருந்து ஐக்கிய நாடுகள் சபை பின்வாங்கியிருக்கின்றது.

1983ஆம் ஆண்டு உள்நாட்டுக் கலவரங்கள் ஆரம்பமான காலம்முதல் பல்வேறு காலகட்டங்களில் மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்கள் இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்று அங்கு தஞ்சமடைந்தனர். அவர்களில் அண்ணளவாக 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் மீண்டும் இலங்கைக்குத் திரும்பியுள்ளனர். கடந்த 25 ஆண்டுகளாக இலங்கைக்குத் திரும்பிச் செல்ல விரும்பும் ஈழத்தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் பணிகளை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் முகவரகம் மேற்கொண்டுவருகின்றது. இத்தகைய பின்னணியில், அகதிகளைத் திருப்பி அனுப்பும் திட்டங்களில் இருந்து அந்த அமைப்பு திடீரெனப் பின்வாங்கியுள்ளமை பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது.

நாடு திரும்பும்போதான பாதுகாப்புக் காரணங்களைக் கருத்திற்கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக பொதுவாகக் கூறப்படுகின்றது. ஆனால், இவ்வாறான முடிவுகள் வெறுமனே நாடு திரும்பும்போதான பாதுகாப்பை மட்டும் கருத்திற்கொண்டு எடுக்கப்படுவதில்லை என்பதே உண்மை. புலம்பெயர்ந்தவர்கள் மீண்டும் தங்களின் நாடுகளுக்குத் திரும்பும்போது, அவர்களின் பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரம் என்பன உறுதிப்படுத்தப்பட்டுள்ளனவா? அவர்கள் அரசியற்பழிவாங்கலுக்கு உள்ளாகின்றனரா? மீள நிகழாமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா? உள்ளிட்ட பல்வேறு பரிசீலனைகளில் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் முகவரகம் ஈடுபடும். இந்த விடயங்களில் திருப்தி ஏற்படவில்லை என்றால், அகதிகளை அனுப்பும் திட்டங்களில் இருந்து பின்வாங்கும். எல்லாவற்றுக்கும்மேல், புலம்பெயர்ந்தவர்கள் தங்கள் நாட்டுக்குத் திரும்பிச்செல்லமுடியாத நிலையே காணப்படுகின்றது என்று ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் முகவரகம் கருதினால், அது சர்வதேச அளவில் ஒரு கறுப்புப் புள்ளியாகவே பார்க்கப்படும். இது சர்வதேச முதலீடுகள் மற்றும் சர்வதேச உதவித் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் ஓர் எதிர்மறைச் சான்றிதழாகவே அமையும்.


இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பிய பலர், 'மீண்டும் இந்தியாவுக்கே தப்பிச்சென்றால் என்ன?' என்று எண்ணுமளவுக்கே இங்குள்ள அக, புறச் சூழ்நிலைகள் அமைந்திருக்கின்றன. சிலர் தப்பிச் சென்றும் உள்ளனர். குறைந்தபட்சம் அத்தியாவசிய ஆவணங்கள்கூட இல்லாத நிலையில் வாழ்வோரும் பலர் உள்ளனர். எனவே, இவ்வாறான விடயங்களை ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதிவிரைவாகச் சரிசெய்யவேண்டும். அதை விடுத்து, 'அகதிகளை வரவேற்கின்றோம்' என்று ஊடக அறிக்கை வெளியிடுவதால் அகதிகள் வரப்போவதுமில்லை, ஐ.நா. மாறப்போவதும் இல்லை.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

## நாளொரு நல்வார்த்தை

பலம் பொருந்தியவனின் பலத்தைக் குறைப்பதால் பலவீனனை பயில்வானாக்க முடியாது.

-ஆபிரகாம் லிங்கன்-




# விவசாய உற்பத்தி ஏற்றுமதிக்கு தேசியத் திட்டம் தயாரிப்பு

கொழும்பு, ஓக.23

**விவசாய உற்பத்திகளை வர்த்தக அமைச்சு மற்றும் கைத்தொழில் அமைச்சுகள் ஊடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைக்கு வழங்குவதற்கும், விவசாய ஏற்றுமதியை மேற்கொள்ளும் முயற்சியாளர்களை முன்னேற்றுதல் மற்றும் புதிய முயற்சியாளர்களை உருவாக்குவதற்கும் தேசிய திட்டமொன்று தயாரிக்கப்படவுள்ளது.**

இதுதொடர்பான கலந்துரையாடல் நாடாளுமன்றத்தில் கைத்தொழில் மற்றும் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி, வர்த்தக வாணிபத்துறை, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க மற்றும் காணி, நீர்ப்பாசனப் பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க தலைமையில் நடைபெற்றது. இதன்போது விவசாய உற்பத்திகளின் அளவு, தற்போது காணப்படும் விவசாய உற்பத்திகளில் ஏற்றுமதி செய்யக்கூடியவற்றின் அளவு போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக இந்தத் திட்டத்தை தயாரிப்பதற்கு மூன்று அமைச்சுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் விதமாக குழு ஒன்றை நியமிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. (ச-இ)



# எச்சரிக்கை மட்டத்தில் வெப்பநிலை

கொழும்பு, ஓக.23

நாட்டின் பல பகுதிகளில் வெப்பநிலை அதிகரித்த மட்டத்தில் நிலவக்கூடும் என வளிமண்டலவியல்திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்கள் மற்றும் ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் உள்ள சில பகுதிகளில் வெப்பக் குறியீடானது மனித உடலால் உணரப்படும் வெப்பநிலை, எச்சரிக்கை மட்டத்தில் காணப்படும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)



# ஒரு கிலோ ஹெரோய்னுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஓக. 23

பயாகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குடா பயாகலப் பகுதியில் களுத்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் ஹெரோய்ன் போதைப் பொருளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்டவர் பயாகல பகுதியைச் சேர்ந்த 44 வயதானவராவார். சந்தேகநபரிடமிருந்து 1 கிலோ 175 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச-இ)



# ராஜிதவுக்கு ஒலிபெருக்கி அறிவிப்பு

கொழும்பு, ஓக. 23

எதிர்வரும் 29ஆம் திகதி முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு, ஒலிபெருக்கி மூல அறிவிப்பை நீதிமன்ற அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர்.

கொழும்பு நீதிவான் நீதிமன்ற அதிகாரிகள் நேற்று அவரது வீட்டில் எழுத்துபூர்வ அறிவிப்பை வெளியிட்டனர்.

அத்துடன் மாலபே, தலஹேனவில் உள்ள அவரது இல்லத்தில் ஒலிபெருக்கிமூல அறிவிப்பையும் வெளியிட்டனர். (ச-இ)

# வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதிக்கும் அரச மருத்துவர்கள்

யாழ்ப்பாணம், ஓக.23

அரசாங்க மருத்துவர்கள் சங்கம் எதிர்வரும் 25ஆம் திகதி தொடக்கம் வேலைநிறுத்தப் போராட்டமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளது. அரசாங்க மருத்துவர்களுக்கான வருடாந்த இடமாற்றங்களின் போது முன்பிருந்த வெளிப்படைத்தன்மை இப்போது மாற்றப்பட்டுள்ளது. குறிப்பாக கஷ்டப் பிரதேசங்களுக்கான இடமாற்றங்கள், வருடாந்த இடமாற்றங்கள் என்பன தான்தோன்றித்தனமாக மேற்கொள்ளப்படுகின்றன எனத் தெரிவித்தே குறித்த வேலைநிறுத்தப் போராட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை
ஞாயிற்றுக்கிழமை - ஆவணி 08
24.08.2025
சுபநேரம் : 09.05 - 10.35
ராகுகாலம் : 04.35 - 06.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும்!

## மனோ எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, ஓக. 23

மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும். புதிய அரசமைப்பும் அவசியம். அதற்குரிய நடவடிக்கையை விரைந்து ஆரம்பிக்கப்படவேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோகணேசன் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை என்பது வெறுமனே சிங்கள, பௌத்த நாடு மட்டும் அல்ல. இந்நாடு சிங்கள, தமிழ், முஸ்லிம் நாடு. பௌத்த, இந்து, இஸ்லாம் மற்றும் கத்தோலிக்க நாடு. இந்த அரசாங்கத்துக்கு பொறுப்பு உள்ளது. எனவே, பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்குவதற்குரிய நடவடிக்கையை அரசாங்கம் ஆரம்பிக்கவேண்டும். மாகாணசபைத் தேர்தல் எப்போது நடத்தப்படும் என்ற உறுதிமொழி அவசியம். புதிய அரசமைப்பை இயற்றுவதற்குரிய பேச்சை ஆரம்பிக்கவும். அதேபோல நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவும். இவை முழுமையான தீர்வு அல்ல. குறைந்த பட்சம் மேற்படி மூன்று விடயங்களை ஆரம்பித்து, சிறப்பான ஆரம்பத்தை வழங்குமாறு கோருகின்றேன்- என்றார். (ச-44)


## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

### இறைச்சிக்கடை குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க கேள்வி அறிவித்தல் - 2025

கீழ்க்குறிப்பிடப்படும் இறைச்சிக்கடை 2025ஆம் ஆண்டிற்கு (30.08.2025-31.12.2025) குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்கேள்வி சபையினால் கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 23.08.2025 - 29.08.2025 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 29.08.2025 பி.ப 02.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 29.08.2025 வெள்ளிக்கிழமை பி.ப 02.00 மணி
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாகக் குறிப்பிட்டு மூலப்பிரதியையும் இணைப்பிரதியையும் "தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்" என்னும் முகவரிக்கு எதிர்வரும் 29.08.2025 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதுடன், உரிய கட்டணங்களைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | விபரம் | வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஆகக் குறைந்த பகிரங்க கேள்வித்தொகை |
|---|---|---|---|---|---|
| | புத்தூர் உப அலுவலகம் (சுன்னாகம் வீதி, புத்தூர்) | | | | |
| 1 | புத்தூர் மாட்டிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 40,000.00 | 400,000.00 |

கேள்விகள் தொடர்பான நிபந்தனைகளை ஏற்கனவே 2024.10.26 ஆம் திகதி இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் குறிப்பிட்டதற்கமைவாக பின்பற்றவும்.

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**
**2025.08.23**

(CR 45897) E


## திடீர் சுகவீனம் யுவதி இறப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 23

கிளிநொச்சி - பூநகரி பகுதியைச் சேர்ந்த யுவதியொருவர், திடீர் கால்வீக்கம் ஏற்பட்டு உயிரிழந்துள்ளார். கௌதமன் தமிழ் நிலா (வயது-24) என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த யுவதிக்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் கால் வீக்கம் ஏற்பட்டுள்ளது. சில நாள்களுக்கு பின்னர் அந்த வீக்கம் குணமடைந்துள்ளது. இதைத் தொடர்ந்து, மீண்டும் அவருக்கு கால் வீக்கம் ஏற்பட்ட நிலையில், கடந்த 14ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் சிகிச்சையின்போது நேற்றுமுன்தினம் இரவு அவர் உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். (ம-26)


## கேள்விஅறிவித்தல்

### பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

1. எமது சங்கத்தின் நிதி ஒதுக்கீட்டில் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் உள்ளவாறான வேலைத் திட்டத்தினை பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடம் இருந்து கேள்விகளை கீழ்க் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைக்காக கோருகின்றது.
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டுமான அமைப்புக்கான CIDA பதிவு மேற்கொள்ளப் பட்டிருத்தல் வேண்டும்.
4. தேவையான தகமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தொலைபேசி: 021 205 1915 இல் இருந்து மேலதிக தகவலை பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் அலுவலக வேலைநாட்களில் 25-08-2025 ஆம் திகதியிலிருந்து 08-09-2025 ஆம் திகதி வரை மு.ப 09.00 முதல் பி.ப 15.00 மணிவரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணமொன்றை தலைவர், பெறுகைக்குழு பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் எனும் முகவரியில் எழுத்து மூலமான கோரிக்கையை சமர்ப்பித்து அவர்களிடம் இருந்து 25-08-2025 ஆம் திகதியிலிருந்து 08-09-2025 ஆம் திகதி வரை மு.ப 09.00 முதல் பி.ப 15.00 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 3000.00 (Vat நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாக செலுத்தப்பட வேண்டும்.
7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து "தலைவர், பெறுகைக்குழு பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்" எனும் முகவரிக்கு 10-09-2025 ஆம் திகதி 10.00 மணிக்கு முன்பதாக கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வி நேரம் முடிந்த உடனேயே வருகை தரும் கேள்வி தாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| Co-oP /2025/04 | Construction of Office Building – Phase - 01 | 18.7 million | 180 நாட்கள் | C7 அல்லது அதற்கு மேல் | 80,000.00 | 90 Days |

9. கேள்வி கோரல் பற்றிய முன்னோடிக்கூட்டம் 04.09.2025 ஆம் திகதி 10.00 மணிக்கு பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

**தலைவர்.**
**பெறுகைக்குழு**
**பண்டத்தரிப்பு பனை தென்னை**
**வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**

(CR 45892) J-1



## சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 D12 நடாத்தும் கார்னிவல் மற்றும் இலவச மருத்துவ சேவைகள்



பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள திருவிழா காலத்துக்கான லயன்ஸ் காரியாலத்தில் கண் பரிசோதனையும், மூக்குக் கண்ணாடி வழங்கலும், (Eye Screening), இலவச இரத்த அழுத்த பரிசோதனை, (Blood pressure Testing) இலவச நீரிழிவு பரிசோதனை, (Diabetic Screening) நடைபெற்றுவருகின்றது.

மேலும் எமது காரியாலத்தில் புதிய லயன்ஸ் அங்கத்துவம் (New Members) பற்றிய மேலதிக விபரங்களையும் (Lions Branding) பெற்றுக் கொள்ளலாம்.

**அத்துடன் லயன்ஸ் கண் மருத்துவமனைக்கு நிதி திரட்டுவதற்காக சர்வதேச லயன்ஸ் மாவட்டம் 306 D12 நடாத்தும்**

### கார்னிவல் (CARNIVAL)

Lions International – District 306 D12
District Governor's 6.0 Service Project

Vision
Environment
Diabetes
Hunger
Childhood Cancer
Youth

**இடம்**
சங்கிலியன் பூங்கா, நல்லூர்.
**காலம்**
20.08.2025 தொடக்கம்
24.08.2025 வரை
**நேரம்**
மாலை 5.00 இரவு 12.00

லயன்ஸ் கண் மருத்துவமனைக்கு நிதிப் பங்களிப்பு செய்ய விரும்புவோர் தொடர்புகளுக்கு :

**(Lions Eye Hospital Financial Contributors to Contact)**

Lion. Dr K.M.Pathmanathan
Inaugural Distrct Governor 306 D12
**077 732 3702**
**district306d12@gmail.com**



*We Serve With Humanity*


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு



கடந்த 07.08.2025
அன்று சிவபதடைந்த எமது சகோதரர்
அமரர்
**வேலாயுதபிள்ளை சூரியகுமாரன்**
**(பசுபதி உருத்திராட்ச நாயனார்)**

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

இடம் : கிருபாகர சிவசுப்ரமண்ய சுவாமி கோவில் திருமண மண்டபம் (புதுக்கோவில்)

திகதி : 24.08.2025 ஞாயிற்றுக்கிழமை பகல் 12.00 மணி

(மேலும் யாரையேனும் அழைக்கத் தவறி இருந்தால் அவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்)

செல்வவேல்
இல.10, கல்லூரி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

சகோதரர்கள்
077 071 1365, 077 539 6682

(CS 3654) E


# மாணவர்களுக்கு சித்திரப்போட்டி!

யாழ்ப்பாணம், ஓக.23

இலங்கை இந்துசமய, கலாசார அலுவல்கள்திணைக்களம்மற்றும்இலங்கை அஞ்சல் திணைக்களம் ஆகியன இணைந்து நடத்தும் 'தேசிய தீபாவளி விழா தபால் முத்திரைச் சித்திரப் போட்டி 2025' எனும் தொனிப்பொருளில் மாணவர்களுக்கான ஆக்கத்திறன் ஆளுமையை வெளிக்கொணரும் சித்திரப்போட்டி இடம்பெறவுள்ளது. கீழ்ப்பிரிவில் 6 வயது தொடக்கம் 10 வயது வரையுள்ள மாணவர்கள் "உள்ளத்தில் ஒளி பரப்பும் தீபாவளி", மத்திய பிரிவில் 11 வயது தொடக்கம் 15 வயது வரையுள்ள மாணவர்கள் "நாடும் வீடும் செழிக்கும் தீபத்திருநாள்", மேற்பிரிவில் 16 வயதிலிருந்து 19 வயது வரையுள்ள மாணவர்கள் "ஏற்றும் ஒளியில் நம்பிக்கையின் அடையாளம் தீபாவளி" ஆகிய தொனிப்பொருள்களில் ஓவியங்களை வரைய வேண்டும்.

ஆக்கங்கள் ஏ4 தாளில் கிடைப்பக்கமாக வரையப்படவேண்டும். படத்தினைச் சுற்றிவர அரை அங்குலம் இடைவெளி விட்டு வரையப்படவேண்டும். கலர்ப்பென்சில் தவிர்ந்த ஏனைய வர்ணங்கள் பாவிக்கலாம், வரைதல் தாளில் பின் பக்கத்தில் முழுப்பெயர் தமிழ் மற்றும் ஆங்கிலத்திலும், பிறந்த திகதி, முகவரி, ஆகிய விடயங்கள் ஆங்கிலத்தில் பெரிய எழுத்துகளில் எழுதப்படுவதோடு தொலைபேசி இலக்கமும் குறிப்பிடவேண்டும்.

ஆக்கங்களை பாடசாலை அதிபர் அல்லது அறநெறிப்பாடசாலை அதிபர்/ பொறுப்பாசிரியர் சிபாரிசுடன் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் தேசிய தீபாவளி தபால் முத்திரை சித்திரப்போட்டி 2025 எனத் தலைப்பிட்டு, பங்குபற்றும் பிரிவினையும் குறிப்பிட்டு எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

போட்டிக்குச் சமர்ப்பிக்கப்படும் ஓவியம் புதிய ஆக்கமாக அமையவேண்டும், இணையத்திலுள்ள படங்கள்/ முன்னர் வேறுவகையில் சமர்ப்பிக்கப்பட்ட படங்களாக இருப்பின் போட்டியிலிருந்து நிராகரிக்கப்படும்.

தெரிவின்பின் குறித்த வகையில் அமைந்தால் பரிசு மீளப்பெறப்பட்டு சட்டநடவடிக்கை எடுக்கப்படும். மேலதிகத் தொடர்புகளுக்கு 0112552641 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பினை மேற்கொள்ளலாமென இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (ச-41)



இயற்கைக்கான கூட்டிணைவில் சமூகப் பங்களிப்பை மேம்படுத்தும் நோக்குடன் அழிவின் விளிம்பிலுள்ள 'இந்தியன் கோர்சர்' எனும் பறவையினத்தைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் விழிப்புணர்வுப் பலகையொன்று கடந்த சனிக்கிழமை வேலணைப் பிரதேசத்தின் மண்கும்பான் பகுதியில் கால்நடை மேய்ச்சல் தரைக்காக அடையாளப்படுத்தப்பட்ட அரச நிலத்தில் நடப்பட்டது. (ச-27)


## REGIONAL DIRECTORATE OF HEALTH SERVICES, JAFFNA
## INVITATION FOR BIDS

**Procurement of furniture & Equipment for MO Quarters BH- Tellippalai & NO Quarters BH- Point pedro**

A. The Chairman, Regional Procurement Committee invites sealed bids from eligible and qualified bidders for the Supplies, Works as specified following Tables.

01) supply of furniture & Equipment for MO Quarters BH- Tellippalai & NO Quarters BH- Point pedro

Bidding will be conducted through National Competitive Bidding Procedure

B. To be eligible for contract award the successful bidder shall not have been blacklisted and shall need the following requirements

01) Bidders shall have valid business registration
02) Bidders shall have Manufacturer Authorization for their goods.

C. Interested eligible bidders may obtain further information from the Regional Director of Health Services, Jaffna Contact No (021 2214966/4557 ), during the office hours and inspect the Bidding Documents at the same address any working days for 9.00am to 3.00pm except 12.30 to 13.30 hours

D. A complete set of English Bid documents may be purchased by interested bidders on the submission of "Application for Bid Documents" available in this office and upon payment of a non-refundable fee as specified in the table by cash on working days from 25.08.2025 to 09.09.2025 during 09.00 Hours to 15.00 Hours.

E. Bids must be delivered to Chairman, Regional procurement Committee, Regional Director of Health Services, Health Village, Pannai, Jaffna on or before 10.00 AM of 09.09.2025 to the address given below in the tender box available at the Room of RDHS office Bids will be opened immediately after the closing of the bids in the presence of the bidders or their representatives.

F. Bid shall be valid for a remind 90 days from the last date fixed for receiving of Bids or any extended period and Bid Security valid for 118days from the bid opening.

G. Pre bid meeting Will be held on 03.09.2025 at 10.00am At RDHS Office Jaffna

H. Procurement committee will be the right to make final decision in regard the accept or reject Bids

| Reference No | Item | Qty | Non refundable fees | Bid Security | Bid Security Validity period |
|---|---|---|---|---|---|
| NP/04/41/03/TPM/04/03/N-07 | Steel Almirah | 28 | 2,000.00 | 40,000.00 | Till 05.01.2026 |
| | Dining Table (6 Persons) | 5 | | | |
| | Dining Chairs | 32 | | | |
| | Wooden bed with Mattress (Single) | 24 | | | |
| | Wooden bed with Mattress (Double) | 04 | | | |
| | Wooden Table (3x6) | 02 | | | |
| | Wooden Table (4x2) | 25 | | | |
| | Wooden Chair | 25 | | | |
| | Wooden Chair with Cushion (Non–Revolving) | 32 | | | |
| | Sofa set | 03 | | | |
| | Plate Stand | 05 | | | |
| | Dressing Table | 12 | | | |
| | Cloth drying rack | 12 | | | |
| | Cloth Rack | 24 | | | |
| NP/04/41/03/TPM/04/03/N-08 | Steel Almirah | 12 | 2,000.00 | 20,000.00 | Till 05.01.2026 |
| | Wooden bed with Mattress (Single) | 02 | | | |
| | Wooden Table (4x2) | 12 | | | |
| | Office Chair with Cushion (Non–Revolving) | 12 | | | |
| | Plastic Chair with Arm | 20 | | | |
| | Cloth drying rack | 12 | | | |
| | Cloth Rack | 12 | | | |

Chairman -Regional Procurement committee
RDHS Office. Jaffna.



## வீடு/காணி விற்பனைக்கு

**உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகில் வீடு வளவு விற்பனைக்கு உண்டு**

தொடர்புகளுக்கு: குகநேசன்
07904 074 740 (UK)
0044 7904 074 740 (Whatsapp)



## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் - 1983 - இந்து - V - ரோகிணி
3ம் பாதம் - 8 செவ்வாய் - கி.பா - 56
உயரம் - 5'.3" - Accountant & Cashier (Private)
ஆணுக்கு மணமகள் தேவை (வெளிநாடு வேண்டாம்)

தொடர்பு: **077 395 6857**

(CS 3856) E



## வாடகைக்கு வீடு

பலாலி வீதியில் திருநெல்வேலி சந்தியிலிருந்து 1 கிலோமீட்டர் தூரத்தில் அம்மாச்சி உணவகத்துக்கு அருகாமையில் இரண்டு அறைகள், சமையலறை, இரண்டு குளியலறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. 4 பல்கலைக்கழக மாணவர்கள் அல்லது மாணவிகள் அல்லது நான்கு பேர் கொண்ட சிறிய குடும்பத்துக்கான புத்தம் புதிய வீடு வாடகைக்கு உள்ளது.

**தேவையுள்ளோர் 077 210 6851 என்ற தொலைபேசிக்கு ஞாயிறு தவிர்ந்த நாட்களில் தொடர்பு கொள்ளவும்.**

(CS 3850) E


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு தேவை

மாதவாடகைக்கு புதிய வீடு அல்லது அடுக்குமாடி குடியிருப்புக்கள் தேவை.

நிபந்தனைகள்:
- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அறைகள்.
- கே.கே.எஸ் சாலை அல்லது அருகில்
- யாழ்ப்பாண நகரத்திலிருந்து தூரம் 8 கி.மீ க்கும் குறைவானது.
- குடும்ப அங்கத்தவர்கள் 6/7

**077 301 3700**



## Chundikuli Girls' College Jaffna

**VACANCY**
**Teacher of Accounting**

Applications are invited from suitable candidates for the above vacancy.

**Requirements**
- Should possess a degree in the relevant field.
- Should be able to teach Accounting for A/L English medium classes.

Apply before 29th August 2025, with the names at two non- related referees.

Only short listed candidates will be called for an interview.

Principal,
Chundikuli Girls' College,
Jaffna.

**Postal Address :** No. 6, Colombogam road, Chundikuli, Jaffna
**Email :** forwardcgc@yahoo.com


# கணக்காய்வு அலுவலகத்தின் திறனை அதிகரிக்கத் திட்டம்

தேசிய கணக்காய்வு அலுவலக நடவடிக்கைகளுக்கு செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி குறைந்த ஊழியர்களுடன் செயற்திறனை அதிகரிப்பது தொடர்பில் அரசாங்க நிதிக்குழு கவனம்செலுத்தியுள்ளது. அரசாங்க நிதிக் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா வெளிநாடு சென்றுள்ளதால், குழுவின் தற்காலிகத் தலைவராக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ரவூப் ஹக்கீம் தலைமையில் நிதிக்குழு அண்மையில் கூடியபோது இந்த விடயங்கள் பரிசீலிக்கப்பட்டுள்ளன. தேசிய கணக்காய்வு அலுவலகத்தின்கீழ் மாகாண மட்டத்தில் ஒரு அலுவலக அமைப்பை நிறுவுவதன் முக்கியத்துவ மும் பரிசீலிக்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அலுவலகத்துக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டுக்கும் நிதிக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாகவும் இதில் கவனம்செலுத்தப்பட்டது. அமைச்சகங்கள், திணைக்களங்கள், வெளிநாட்டுத் திட்டங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் உட்பட சுமார் 2 ஆயிரம் நிறுவனங்களைக் கணக்காய்வு செய்யும் கணக்காய்வு அலுவலகத்தில் நிலவும் பணியாளர் பற்றாக்குறை மற்றும் நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் தற்போது பட்டயக் கணக்காளர் மட்டத்தில் 35 உயர் அதிகாரிகள் மட்டுமே பணிபுரிகின்றனர். தற்போதைய சம்பள மட்டத்தில் உயர் கணக்கியல் தேர்வில் தேர்ச்சி பெற்ற அதிகாரிகளைத் தக்கவைத்துக்கொள்வதில் சிக்கல் உள்ளது என்று கணக்காய்வுத் திணைக்கள அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். (எ-இ)



# பெண்களுக்கான கபடிப்போட்டி

யாழ்ப்பாணம், ஒக.23

தெல்லிப்பழைப் பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவில் பெண்களுக்கான கபடிப்போட்டி இளவாலை யிலுள்ள மோகன் ஞாபகார்த்த உள்ளக அரங்கில் கடந்த திங்கட் கிழமை நடைபெற்றது. இறுதிப்போட்டியில் வயாவிளான் ஜீவ ஒளி இளைஞர் கழக அணியை எதிர்த்துப் போட்டியிட்ட கருகம்பனை இந்து இளைஞர் கழக அணி 45:23 என்ற கணக்கில் வெற்றிவாகை சூடியது. (ச-41-27)

# சந்நிதி முருகனைத் தரிசித்து வல்லைக் கடல் நீர் ஏரி வலம்

யாழ்ப்பாணம், ஒக.23

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் கொடியேற்றத்திருவிழாவை முன்னிட்டு சைவப்பிரகாசப் பேரவையின் ஏற்பாட்டில் வல்லைக் கடல் நீர் ஏரி வலம் நடைபெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு வல்லை ஆஞ்சநேயர் ஆலயத்தில் இருந்து பால், பன்னீர்,கலச ஊர்வலம் ஆரம்பமாகவுள்ளது.

சந்நிதி முருகனை மனதிருத்தி வல்லைக் கடல் ஏரி வலம் வருவதால் நோய் நீக்கம், செல்வம், புத்திர பாக்கியம், துன்பங்கள் நீங்குதல் ஆகிய பலன்களைப் பெறலாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ச-25,20-66)

## மரண அறிவித்தல்

தோற்றம்
03 . 05 . 1930



மறைவு
19 . 08 . 2025

## அங்கயற்கண்மனி இளையதம்பி

**(ஓய்வு பெற்ற ஆசிரியர் - யா/ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி - புத்தூர்)**

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி, டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட அங்கயற்கண்மணி இளையதம்பி 19.08.2025 செவ்வாய்க்கிழமை டென்மார்க்கில் காலமானார்.

அன்னார் ஓய்வுபெற்ற ஆசிரியர் பொன்னையா இளையதம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பொன்னையா - அபிராமிப்பிள்ளை (வெள்ளைப் பேத்தி) தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தையா சின்னாச்சிப்பிள்ளையின் அன்பு மகளும், மோகன், நந்தன், நளாயினி, யமுனா, சாந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், வாசுகி, பூங்கோதை, தாமரைச்செல்வன், ஸ்ரீகந்தவேல், உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், கார்த்திகா, கோகுலன், தேனுகா, குமணன், யோகன், மயூரி, கீர்த்தனா, ஜாதவன், தினேஸ், அமிதா, உசேனி, தரங்கிணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், யூலியன் யுவன், தர்மியன், கஜனா, மைத்திரி, சாமா, இசை ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்களான அன்னக்கிளி (சரசு), துரைசிங்கம் (கிராம அலுவலர்) மற்றும் ராஜேஸ்வரி (ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர்) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 25.08.2025 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணிவரை நடைபெற்று தகனக்கிரிகைகள் Nybrog Kirkegardskapel, Kronprinsensgade 34, Nyborg, Denmark இல் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புக்கு:**
**நந்தன் - 0045 6065 1526**
**மோகன் - 0049 1786 974079**

**தகவல்: குடும்பத்தினர்**

(CS 59191) E

## பயங்கரவாதத்...

அமைச்சர் விஜித ஹேரத் நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றினார். இதன்போது, வடக்கு - கிழக்கு மாகாணங்களுடன் தொடர்புடைய பல்வேறு விடயங்கள், பயங்கரவாதத் தடைச்சட்டம், புதிய அரசியலமைப்புத் தொடர்பில் தனது கருத்துகளை முன்வைத்தார். இதன் தொடர்ச்சியாகவே, செப்ரெம்பர் மாத ஆரம்பத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக நீக்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கும் விடயத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கூறும்வரை நாம் காத்திருக்கவில்லை. அந்தச் சட்டம் நீக்கப்படும் என தேர்தல் விஞ்ஞாபனத்தில் நாம் உறுதியளித்தோம். நாம் ஆட்சிக்கு வந்த பின்னர் குறுகிய காலப்பகுதிக்குள் இதற்கான பணியை முன்னெடுப்பதற்காக விசேட குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழு பல தடவைகள் கூடியது. திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன.

இந்த மாதத்தின் இறுதியில் பணிகள் நிறைவேற்றப்பட்டு, செப்ரெம்பர் ஆரம்பத்தில் அந்தச் சட்டம் நீக்கப்படும். இதற்குரிய வர்த்தமானி வெளியாகும். பயங்கரவாதத் தடைச்சட்டம் தற்போது இன, மத அடிப்படையில் பயன்படுத்தப்படுவதில்லை. திட்டமிட்ட குழுக்களுக்கு எதிராகவே பயன்படுத்தப்படுகின்றது. பாதாள குழுக்களைக் கட்டுப்படுத்த புதிய சட்டம் அவசியம். அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் - என்றார். (அ-ம-44)

## செம்மணி...

என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

செம்மணிப் புதைகுழி மட்டுமல்ல மேலும் சில இடங்களிலும் எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவை தொடர்பில் பக்கச்சார்பற்ற நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இதற்கு தேவையான நிதி, ஆளணி வளம் என்பன அரசால் வழங்கப்படுகின்றன.

செம்மணிப் புதைகுழியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளை மக்களுக்கு அடையாளம் காண்பதற்கு காண்பிக்கப்பட்டது. இலங்கை வரலாற்றில் இதற்கு முன்னர் அவ்வாறு நடக்கவில்லை. அதுபோல் செம்மணியைப் பார்வையிடுவதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரையும் அனுமதித்தோம்.

நீதிமன்றம் வழங்கும் கட்டளைகளுக்கு அமைய எதிர்கால நடவடிக்கைகள் அமையும். வடக்கிலும், கிழக்கிலும் இறந்தவர்களை நினைவுகூரும் உரிமை எமது ஆட்சியிலேயே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த விடயங்கள் தொடர்பில் நாங்கள் திருப்திப்படுகின்றோம் - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணிலைக் காண்பதற்கு ஓடோடி வந்த மைத்திரி

### அருகில் அமர்ந்து ஆறுதல்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த வேளையில், அவரைக் காண்பதற்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீதிமன்றத்துக்கு விரைந்தார்.

ரணில் கைது செய்யப்பட்டதும், பல்வேறு அரசியற் தலைவர்கள் நீதிமன்றத்துக்கு நேற்றுச் சென்றிருந்தனர். எனினும், முதலாவது நபராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரியே வந்திருந்தார். வழக்கு நடைபெறும் வேளையில் அவர் ரணிலுக்கு அருகில் அமர்ந்திருந்தார். அத்துடன், நாமல் ராஜபக்ச, முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஆகியோரும் நீதிமன்றத்துக்கு விரைந்திருந்தனர். (அ-ம)

## இராணுவ...

நாளைமறுதினம் பேரணியும் போராட்டமும் இடம்பெறவுள்ளன.

இது தொடர்பில் பருத்தித்துறை நகர சபையின் தவிசாளர் வின்சன் டி போல் டக்ளஸ் போல் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் - பருத்தித்துறைத் துறைமுகத்துக்கு எதிர்ப்பக்கமாக அமைந்துள்ள பருத்தித்துறை நீதிமன்றம், பருத்தித்துறை தபாலகம், பருத்தித்துறை நகர சபை ஆகியவற்றிற்குச் செந்தமான காணிகளை இராணுவம் தற்போது ஆக்கிரமித்து வைத்துள்ளது. அவற்றில் இருந்து இராணுவத்தை வெளியேறுமாறும், மக்களின் பயன்பாட்டுக்கு அவற்றை ஒப்படைக்குமாறும் வலியுறுத்தியே இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறைத் துறைமுகத்திலிருந்து கவனவீர்ப்புப் பேரணி ஆரம்பமாகிப் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தைச் சென்றடைந்து அங்கு கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. இதன்போது, பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, அரசாங்கத்துக்கு மனுவொன்றும் கையளிக்கப்படும் - என்றார். (அ-ம-66-100)

## இராணுவத்தின்...

களை மக்களிடம் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் ஆட்சிக்கு வந்த பின்னர் குறுகிய காலப்பகுதிக்குள் வடக்கு - கிழக்கில் செயற்பட்டு வந்த இராணுவ காவலரண்கள், பொலிஸ் காவலரண்கள் நீக்கப்பட்டன. 34 வருடங்களுக்குப் பின்னர் பலாலி வீதி திறக்கப்பட்டது. பொதுப் போக்குவரத்துச் சேவையும் அந்தப் பகுதியில் இடம்பெறுகின்றது. போரின்போது மக்களின் காணிகள் கையப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தன. உரிய திட்டமிடலுக்கு அமைய தற்போது அவை விடுவிக்கப்பட்டுவருகின்றன. இவ்வாறு விடுவிக்கப்படவிருந்த இராணுவ முகாமொன்றிலேயே அண்மையில் அசம்பாவிதமும் (முத்துஐயன்கட்டு) இடம்பெற்றது.

வடக்கு, கிழக்கு மக்களுக்கு அவர்களுக்குரிய காணிகளை வழங்குவதே எமது நோக்கம். குறுகிய காலப்பகுதிக்கள் இதற்குரிய நடவடிக்கையை நிறைவு செய்ய எதிர்பார்க்கின்றோம்' - என்றார். (அ-ம-44)

## உள்ளகப்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். நபரொருவரின் இனம் மற்றும் மதத்தை அடிப்படையாகக்கொண்டு மனித உரிமைகளை மீறுவதற்கு எமக்கு எவ்வித அரசியல் தேவைப்பாடும் கிடையாது. அனைத்து மக்களினதும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பது எமது பொறுப்பாகும். அதற்காக சட்டங்கள் வலுப்படுத்தப்படும். தேவையேற்படின் புதிய சட்டங்கள் இயற்றப்படும்.

நல்லிணக்க செயற்பாட்டை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தேசிய சமத்துவம், நல்லிணக்கத்துக்காக ஐந்தாண்டு வேலைத்திட்டம் உள்ளது. இதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. ஐ.நா.வின் தொழில்நுட்ப உதவியும் இதற்குக் கிடைக்கப்பெறும். இந்தத் திட்டத்துக்கமைய நாம் முன்னோக்கிச் செல்வோம்.

பொறுப்புக்கூறல் உள்ளகப் பொறிமுறை ஊடாகவே வலுப்படுத்தப்படும். இதற்கு வெளிநாட்டுத் தலையீடுகள் அவசியமில்லை. ஏனெனில் தேசிய நடவடிக்கை வலுப்படுத்தப்பட்டுள்ளது. நீதிமன்றக் கட்டமைப்பு சுயாதீனமாக உள்ளது.

இதனால்தான் பல வருடங்களாக மூடிமறைக்கப்பட்ட - இழுத்தடிக்கப்பட்டுவந்த வழக்குகள் மீள விசாரணைக்கு எடுக்கப்பட்டன. நீதிமன்ற சுயாதீனம் காரணமாகவே இது நடந்தது. இலங்கையில் உள்ளகப் பொறிமுறைமீது நம்பிக்கை இல்லாததால்தான் வெளியகப் பொறிமுறை கோரப்பட்டது. ஆனால் இன்று அந்த நிலைமையை மாற்றியுள்ளோம். அந்தவகையில் சர்வதேசம் ஏற்கக்கூடிய நம்பகரமான உள்ளகப் பொறிமுறை ஊடாகப் பொறுப்புகூறல் பலப்படுத்தப்பட்டுள்ளது.

அரசியல் தேவைப்பாடுகளுக்காக இடம்பெற்ற கொலைகள், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம், ஊடகவியலாளர்கள் கொலை என்பன தொடர்பான விசாரணைகள் இடம்பெறுகின்றன. எந்தவொரு சம்பவத்தையும் நாம் மறக்கவில்லை. சுயாதீன விசாரணைகள் இடம்பெறுகின்றன. எனவே, அனைவராலும் ஏற்கக்கூடிய வகையில் பொறுப்புக்கூறல் நிறைவேற்றப்படும் - என்றார். (அ-ம-44)

## கோட்டை...

மாலை 5 மணியளவில் ரணில் நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டதும் அவருடைய ஆதரவாளர்கள் நீதிமன்றத்தில் திரளத் தொடங்கினார்கள். மின்தடை காரணமாக வழக்கு விசாரணைகள் பிற்போனமை மேலும் பதற்றத்தை ஏற்படுத்தியது.

இரவு 10 மணி தாண்டியும் வழக்கு நடைபெற்று வந்தது. 10.15 மணியளவில் ரணிலின் விளக்கமறியல் உத்தரவு வெளிவந்ததும், அவருடைய ஆதரவாளர்கள் திடீரென ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். நீதிமன்ற வாயில்களிலும் போராட்டமுன்னெடுக்கப்பட்டது. ரணிலை அழைத்துச் செல்லும்போது அவர்கள் நீதிமன்றத்தை முடக்கினார்கள். இதனால், நீதிமன்றத்தின் பாதுகாப்பு பலமடங்கு அதிகரிக்கப்பட்டது. மிக நீண்ட இழுபறிக்குப் பின்னர் ரணில் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். (அ-ம)

## ரணில்...

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில், அவரது மனைவி பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்வதற்காக பிரிட்டனுக்குச் சென்றிருந்தார். முற்றுமுழுதாக தனிப்பட்ட ரீதியில் அமைந்த இந்தப் பயணத்துக்காக, 17 மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட அரச நிதி பயன்படுத்தப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் ரணில் விக்கிரமசிங்கவுடன் பயணித்தவர்கள், அவரின் செயலாளர்களாகப் பணியாற்றியவர்கள் கடந்த சில தினங்களாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வந்தனர். இதன் தொடர்ச்சியாக நேற்று ரணிலும் விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தார். சில மணிநேர விசாரணைகளைத் தொடர்ந்து அவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைதுசெய்யப்பட்டார்.

அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், இரவு 10 மணிவரை வழக்கு விசாரணைகள் இடம்பெற்றன.

'ஜனாதிபதி ஒருவருக்கு தனிப்பட்ட பயணம், அரசமுறைப் பயணம் என்று எதுவுமில்லை. எனவே, ரணிலுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு நீதியற்றது மற்றும் சட்ட முகாந்திரமற்றது' என்று ரணிலின் தரப்பின் முன்னிலையான சட்டத்தரணிகள் சமர்ப்பணத்தை முன்வைத்தனர்.

அத்துடன், ரணிலின் உடல்நிலை காரணமாகவும், புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள அவருடைய மனைவி மைத்திரியை பராமரிக்க வேண்டிய ஒரே நபராக ரணில் இருப்பதாலும் அவரைப் பிணையில் விடுவிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டது. எனினும், அந்தக் கோரிக்கைகளை நிராகரித்த நீதிமன்றம், முன்னாள் ஜனாதிபதி ரணிலை எதிர்வரும் 26ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது. ரணில் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து, கொழும்பிலும் நாட்டின் பல்வேறு இடங்களிலும் போராட்டங்கள் இடம்பெறலாம் என்று கருதப்படுகின்றது. இதையடுத்து, தலைநகர் கொழும்பின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (அ-ம)

## மாகாணசபை...

எது. எங்களின் அன்றைய நிலைப்பாட்டில் மாற்றமில்லையாயினும், அரசியலமைப்பில் உள்ளதால் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் ஆட்சிக்கு வந்த பின்னர் மிகக் குறுகிய காலப்பகுதிக்குள் உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. கடந்த ஆட்சியின்போது ஜனநாயகத்துக்கு விரோதமாக இழுத்தடிக்கப்பட்டுவந்த தேர்தலை நடத்தி ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டது.

எமது நாட்டின் அரசியலமைப்பு மற்றும் சட்டத்தின் பிரகாரமே நாம் செயற்படுகின்றோம். இறையாண்மை, சுயாதீனம் என்பவற்றைப் பாதுகாத்துக்கொண்டே முடிவுகள் எடுக்கப்படுகின்றன. வெளியக அழுத்தங்களுக்கு அடிபணிந்து முடிவுகள் எடுக்கப்படுவதில்லை.

மாகாணசபை முறைமை எமது நாட்டு அரசியலமைப்பில் உள்ளது. அந்தமுறையால் இனப்பிரச்சினை தீரவில்லை. இந்த விடயத்தை அன்றே நாம் சுட்டிக்காட்டினோம். எனினும், அரசியலமைப்பில் மாகாணசபை முறைமை உள்ளதால் தேர்தலை நடத்துவோம்.

புதிய தேர்தல் முறை தொடர்பான யோசனை நிறைவேற்றப்பட்டது. இதற்கமைய எல்லை நிர்ணயம் இடம்பெற்றது. அந்த எல்லை நிர்ணயம் தொடர்பான அறிக்கை நிராகரிக்கப்பட்டது. எனவே, புதிய சட்டமொன்றை இயற்றி தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதற்கு சிறிது காலம் எடுக்கும். அதனை விரைந்து செய்ய முடியாது. ஆனாலும் தேர்தலை நிச்சயம் நடத்துவோம். ஜனநாயக உரிமையைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும் - என்றார். (அ-ம-44)

## புதிய...

முடியாது என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள அரசியலமைப்பு பழமையானது. அடிப்படை உரிமைகள், இனப்பிரச்சினைக்கு நிலையான தீர்வு என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு புதிய அரசியலமைப்பை இயற்றுவதற்குரிய தேவைப்பாடு உள்ளது. எமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இது தொடர்பில் உறுதியளிக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்தப் பணிகள் தாமதமாகவே இடம்பெறும்.

தற்போது பொருளாதாரப் பிரச்சினையே பிரதானமாகியுள்ளது. பூகோள அரசியலும் இதில் தாக்கம் செலுத்தியுள்ளது. இந்தச் சவால்களை எதிர்கொண்ட பின்னர் புதிய அரசியலமைப்புப் பணிகள் இடம்பெறும் - என்றார். (அ-ம-44)

## கொட்டடியில்...

ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொட்டடிப் பகுதியில் உள்ள வீடொன்றில், மலசல கூடமொன்றை அமைப்பதற்காகக் குழி வெட்டியபோது சந்தேகத்துக்கு இடமான வகையில் பையொன்று காணப்பட்டுள்ளது. இதையடுத்து, அது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்ட நிலையில், நீதிமன்ற அனுமதி பெறப்பட்டு அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன. இதன்போது 30 ரி-56 ரக துப்பாக்கிகள், அவற்றுக்குரிய 5 ஆயிரம் தோட்டாக்கள் என்பன மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட சான்றுப் பொருள்கள் யாழ்ப்பாணப் பொலிஸாரால் பொறுப்பேற்கப்பட்டு, நீதிமன்றத்தில் பாரப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ம-26-20)

## செல்வச்...

மாகவுள்ளது. எதிர்வரும் 15 தினங்கள் பெருவிழா இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-66)

## வெலிக்கடை...

வாகனத்தில் அழைத்துச் செல்லப்பட்டு வெலிக்கடைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணையே நீதியைப் பெற்றுத் தரும்

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 23

நீண்டு செல்லும் செம்மணிப் புதைகுழி தொடர்பிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கும் சர்வதேச விசாரணை ஊடாகவே உரிய நீதி கிடைக்கும் என வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் அமைப்பினுடைய தலைவி யோகராசா கலாரஞ்சினி தெரிவித்துள்ளார்

கிளிநொச்சியில் அமைந்துள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க அலுவலகத்தில் மேற்கொண்ட ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர்மேலும்தெரிவிக்கையில், வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஏற்பாட்டில் எதிர்வரும் 30 ஆம் திகதி வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது. வடக்கு - கிழக்கில் இருக்கின்ற தமிழ் அரசியற்கட்சிகள் ஒன்றிணைந்து தமிழர் உரிமைக்காகவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்காகவும் நீதி கிடைக்க ஓரணியில் ஒன்று திரள வேண்டும் - என்றார். (ச-113)

வேலைவாய்ப்பு

யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகில் வசிக்கும் வயதான பெண்ணை பராமரிப்பதற்கு பெண் உதவியாளர் தேவை.

மாத சம்பளம் 60 000/-


தொடர்புகளுக்கு Whats app:
+ 44 790 307 1264 (UK)

CS 59168 E

கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு

இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாமிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete Mixer) மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும் (Hoist) இப்பொழுது எம்மிடம்.

குறிப்பு: இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே. போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.



"நாங்கள் உங்களோடு"

ஆர்க் .என். கம்பனி



- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 535 7803

# 100 தொலைத்தொடர்புக் கோபுரங்கள் கிராமங்களில் விரைவில் நிர்மாணம்

கொழும்பு, ஓக. 23

கிராமத்துக்குத் தொடர்பாடல் வேலைத் திட்டத்தின்கீழ் தொலைபேசித் தொடர்பாடல் மோசமான நிலையில் காணப்படும் பகுதிகளை உள்ளடக்கி 100 தொலைத் தொடர்புக் கோபுரங்களை நிர்மாணிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கிராமியப் பிரதேசங்களிலும் தொலைபேசித் தொடர்பாடல் மோசமானநிலையில் காணப்படும் பகுதிகளிலும் இடையூறுகளை நீக்குவது இதன் நோக்கமென டிஜிற்றல் பொருளாதார விவகாரங்கள் பிரதியமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்தார். (ச-இ)



# "உயிர்ப்பு" ஆற்றுகை

யாழ்ப்பாணம், ஓக.23

தமிழ்ப்பண்பாட்டை எடுத்துரைக்கும் நோக்கில் அரங்கச் செயற்பாட்டுக் குழுவினால், "உயிர்ப்பு" பரீட்சார்த்த அரங்க ஆற்றுகை, இல. 7 ,பழம் வீதி, கந்தர்மடத்தில் அமைந்துள்ள பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. தமிழ் மக்களின் திரள்கையையும், ஒன்றுதிரட்டுதலையும் மையப்படுத்தி நிகழ்த்தப்படும் இந்த ஆற்றுகைக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ள ஆர்வமுடைய அனைவரும் கலந்துகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

மணல் விற்பனைக்கு

கட்டட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற மணல் விற்பனைக்கு உண்டு. கனரக வாகனங்களுக்கு யாழ். மாவட்ட வீதி அனுமதிப் பத்திரம் போட்டு தரப்படும்.

தொடர்புகளுக்கு: 076 3249 977
077 4121 100

CS 59176 A

# மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 04 . 1939



மறைவு 20 . 08 . 2025

## பரமசிவராசா நகுலேஸ்வரி

யாழ்ப்பாணம் நீராவியடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பரமசிவராசா நகுலேஸ்வரி கடந்த (20.08.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - பரிபூரணம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பரமசிவராசா வின் அன்பு மனைவியும், விஜிதா, வினோதா, விவிந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கேதீஸ்வரன், சுரேந்திரன், தட்ஜாயினி ஆகியோரின் அன்பு மாமியாரும், டர்ணிகா, சுலோஜன், தனோஜன், சானா, சாகீசன், அஸ்விதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, கனகசபை மற்றும் சதாசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஏகாம்பரம், கமலம், ரெத்தினம், கனகராசா, மனோன், புனிதம், செல்வம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.08.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


8/1 புகையிரத தெற்கு வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CR/45900) J-1

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 22 . 08 . 1947



உதிர்வு 24 . 07 . 2025

## அமரர் திரு பொன்னையா செல்வராஜா

கடந்த 24.07.2025 அன்று இறைபதமடைந்த அமரர் திரு பொன்னையா செல்வராஜா அவர்களின் 31ம் நாள் கிரியைகளும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் 23.08.2025 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் 118, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அந் நிகழ்விலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அன்னாரது இழப்பின் துயரில் பங்குபற்றியவர்கள், தொலைபேசியில் ஆறுதல் கூறியோர் அனைவருக்கும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

118, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

உம்பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

# குருபூசை நிகழ்வு

யாழ்., ஓக.23

ஸ்ரீமத் கணேஷானந்த சுவாமிகள் குருபூசை நிகழ்வு நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை இடம்பெறவுள்ளது. ஸ்ரீமத் கணேஷானந்த சுவாமிகள் சமாதிக்கோயில் பற்றிய கூட்டம் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ச-41)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... உள்ள அவர்களது பணிமனையில் 23.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org